1984 மார்ச் 5]

திரு. இரெ. இராசமாணிக்கம் : தலைவர் அவர்கள், நான் திருத்தத்தை வழிமொழிகிறேன்.

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, தோல்வியுற்றது.

பிரிவு 2 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 1 முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை, பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

"தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 5/1984) நிறைவேற்றப்பெறவேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

(பிற்பகல் 12–40)

ஊராட்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவு, 1984.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் : (திரு. வே. இரா. ஜெயராமன்) பேரவை முன்னுள்ள கேள்வி :

"தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 6/1984) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, சட்ட முன் வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற்றது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

பிரிவு 2.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் : (திரு. வே. இரா. ஜெயராமன்) : பேரவை முன்னுள்ள கேள்வி :

" பிரிவு 2 சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப்பெற வேண்டும். "

Thiru P. PONNURANGAM: In clause 2, *for* the words, ' Six years and eleven months ', *substitute*, the words ' six years and nine months ".

என்று என் பெயரால் கொடுக்கப்பட்ட திருத்தத்தை நான் மொழிகிறேன்.

திரு. இரெ. இராசமாணிக்கம் : அந்தத் திருத்தத்தை நான் வழிமொழிகிறேன்.

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று தோல்வியுற்றது.

பிரிவு 2 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன். " தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண் 6/1984) நிறைவேற்றப் பெற வேண்டும். "

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறை வேற்றப்பெற்றது.

(எ) நகராட்சி மன்றங்கள் (தனி அதிகாரிகள் நியமனம்) திருத்தச் சட்ட முன் வடிவு 1984.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, நான் கீழ்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

" தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு நகராட்சி மன்றங்கள் (தனி அதிகாரிகள் நியமனம்) திருத்தச் சட்ட முன்வடிவு** (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 7/1984) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெறவேண்டும். "

**1984 ஆம் ஆண்டு பிப்ரவரி 18-ம் தேதி தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS